முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1427

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.08.2023**, சனிக்கிழமை

1. கலிவெல்லப் பிறந்த குருவே
கருணையே வடிவாக வந்த குருவே
அழியாமை தருகின்ற குருவே
ஆறுமுகன் என் அவதாரமே ஞான குருவே
2. குரு அரங்கன் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
குறையிலா ஞான அறிவுரை ஆசி
பெருமைபட சோபகிருது வேங்கை திங்கள்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 09 ம் நாள், 26.08.2023 சனிக்கிழமை)
புகலுவேன் அரங்கனுக்கு சக்தி கூட
3. சக்திமிகு அரங்கன் தர்மம்
சகல தேசமும் நிரம்பிவர
பக்திகொண்டு அரங்கன் பாதை வழி
பழுதின்றி தொடரும் மக்களுக்கு
4. மக்களுக்கு சக்தி கூடும் மரணம் விலகும்
மறுமை வெல்லுகின்ற மகா சித்திகிட்டும்
ஆக்கமுடன் அரங்கனைத் தொடர்ந்து
அகிலத்தில் தர்மவழி தொடர்ந்துவர
5. வரவர உலக மக்களுக்கு வறுமை துன்பங்கள் விலகும்
வஞ்சம் சூழ்ச்சி அகன்றோடி பெருமைதரும் ஞான வாழ்வாக
பிரணவ சித்திமிகு அரங்கன் தவபலத்தோடு
பலமிக்க ஞானிகளாக உலகோர் பாடிடுவேன் அரங்கனால் சித்தி காண்பர்
6. வலம்வர அரங்கன் குடில் நோக்கி
வருவோர்க்கு ஆறுமுகன் என் அருளோடு
அருள்மிக்க ஞான வாழ்வு
அரங்கன் ஆசி தீட்சையால் கிட்ட நேரும்

7. வருமுலகில் அன்னதனால் கலியுகத்தோர்
வணங்கி அரங்கன் குடில் நோக்கி
முருகா அரங்கா என நாளும் ஜெபதபம்
முழுமைபட செய்துகொண்டு வணங்கி வர

8. வருகவே வையகத்தில் மாற்றம்
வடிவேலன் யானிறங்கி அற்புதமாக
தருகுவேன் ஞான ஆட்சிக்காலமதை
தவசி வேண்ட அதன் நோக்கம் சித்தியாகும் வண்ணம்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–